[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE MADRAS ASSEMBLY RULES *RE* THREATENED CLOSURE OF MANY MATCH FACTORIES AND CONSEQUENT UNEMPLOYMENT.

Mr. SPEAKER : கனம் ஸ்ரீ அன்பழகன் அவர்களும், கனம் ஸ்ரீ கோதண்டராமன் அவர்களும் சட்ட சபை விதி 40-ன் பிரகாரம் அமைச்சரை ஒரு சமாசாரத்திற்கு பதிலளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். கனம் ஸ்ரீ அன்பழகன் அவர்கள் இப்பொழுது பேசுவார். 9–10 a.m.

* **Sri K. ANBAZHAGAN :** அவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டினுடைய தென் பகுதியில், சிவகாசி, சாத்தூர் முதலான பகுதிகளிலெல்லாம் ஓரளவு வளர்ந்துள்ள தீப்பெட்டித் தொழில் இன்றைய தினம் மிகப் பெரிய பாதகத்திற்கு ஆளாகியிருக்கின்றது. அந்தத் தொழிலிலே ஈடுபட்டுள்ள ஏறத்தாழ 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள், அந்தத் தொழிலிலே நீடிக்க முடியுமா என்ற சந்தேகமான நிலைமைக்கு ஆளாகியிருக்கிறார்கள். அந்தத் தொழிலை நடத்தும் சிறு சிறு முதலாளிகள், அந்தத் தொழிலைத் தொடர்ந்து நடத்தி, அந்தப் வாணிபத்தை தொடர்ந்து செய்ய முடியுமா என்ற கவலைக்கு ஆளாகி, அந்தத் தொழிலையே மூடிவிட வேண்டும் என்ற நிலைமைக்கு இன்றைக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

ஏறத்தாழ அங்கே தயாரிக்கிற தீப்பெட்டிகளெல்லாம், குடிசைத் தொழிலை ஒட்டி, அதனோடு தொடர்புடைய முறையிலே தயாரிக்கப்படுபவை ஆகும். தொழிலாளிகள் அத்தனை பேரும் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்து அங்கே தொழில் செய்வது இல்லை. அவரவர்கள் வீடுகளிலேயே இருந்து, இத்தொழிலுக்குத் தேவையான குச்சிகள் முதலானவற்றைத் தயார் செய்து தருபவர்கள். மிகக் குறைந்த அளவு கூலி பெறுகிறவர்கள். ஒரு குரோஸ் தீப்பெட்டி, ஏறத்தாழ 40 குச்சிகள் கொண்டது—ஒரு ரூபாய் அளவிலே அடக்கமாகி, அதற்குப் பின்னால் விற்பனைக்கு வெளியே வருகிறது. ஒரு ரூபாய் அளவுக்கு அடக்கம் ஆகும் தீப்பெட்டி குரோஸ் ஒன்றுக்கு மத்திய சர்க்கார் ஏறத்தாழ ரூ. 3–4–0 இன்றைய தினம் வரி விதிக்கிறது. ஒரு ரூபாய் அளவுக்கு அடக்கம் ஆகும் ஒரு குரோஸ் தீப்பெட்டிக்கு ரூ. 3–4–0 வரி போடுவதினால் தீப்பெட்டி ஒன்றை நான்கு புதுக் காசு விலைக்கு விற்பதற்குக்கூட வழி இல்லாமல் அந்த விலையை உயர்த்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதால் தீப்பெட்டி விற்பனை குறைந்து இப்பொழுது தேங்கியிருக்கிறது. அதுபோல், தீப்பெட்டிகள் மக்கள் விரும்பக் கூடிய விலையிலே, வாங்குவதற்குக் கட்டுபடியாகக்கூடிய சரியான விலையிலே கிடைப்பதற்கு வழி இல்லாத சூழ்நிலை உருவாகி இன்றைய தினம் அந்தத் தொழில் முடங்கக்கூடிய அளவுக்கு அங்கு நிலைமை மோசமாக மாறியிருக்கிறது.

இப்பொழுது ஏற்பட்ட புதுக் காசு மாற்றத்தினால் அந்தச் சிறு தொழிலில் ஈடுபட்டிருக்கும் சாதாரண ஏழை எளிய மக்கள் செய்யும் அந்தத் தீப்பெட்டிகளை புதுக்காசுகள் கொடுத்து வாங்க வேண்டியது காரணமாக சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. அத்துடன் வரி காரணமாகவும் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. தீப்பெட்டியின் அடக்க விலையோடு கலால் வரியையும் சேர்த்து மொத்தமாகக் கணக்கிட்டு, அதன் பேரில் விற்பனை வரி விதிக்கப்படுகிறது ; சர்ச்சார்ஜ் முதலியவைகளும் விதிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட நிலையில் அந்தத் தொழிலே அடியோடு பாதிக்கப்படும் நிலைமையில் ஏறத்தாழ லட்சம் மக்களுக்குமேல் பாதிக்கப்படுகிறவர்களாக இருக்கிறார்கள். முப்பது ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட இருக்கிறார்கள். அந்தத் தொழில் தமிழ்நாட்டில் சிறப்பாக வளருவதற்கு வாய்ப்பு பெற்றது. எனவே இந்நிலைபற்றி அமைச்சர் அவர்கள் தெளிவு உண்டாக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

தீப்பெட்டித் தொழிற்சாலையில் இப்படி சிக்கல் ஏற்பட்டிருப்பதை நிறுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டியிருக்க, வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வேலை தேடித் தருவதற்கு அரசாங்கம் தீப்பெட்டித் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதாக நான் கேள்விப்படுகிறேன். பத்திரிகை மூலமாகவும்

அமைச்சருடைய வாக்கு மூலமாகவும் இரண்டு மூன்று இடங்களில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படும் என்ற செய்தியை அறிகிறேன். அதோடு இப்பொழுது சென்னையில் விம்கோ பாக்டரி மூலமாக இத்தொழிலுக்குப் போட்டி ஏற்பட்டிருக்கிறது. முற்றும் இயந்திர முறையில் இயங்கும் அத்துடன் போட்டியிட முடியாத காரணத்தால் இக் குடிசைத் தொழிலே அடியோடு நசித்துவிடும் நிலைமை யில் இருக்கிறது. தீப்பெட்டித் தொழிலானது தமிழ் நாட்டின் ஜீவாதார மான தொழில் என்ற காரணத்தால், அதுபற்றி அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுவதோடு அமைச்சருடைய திட்டத்தையும் அறிய விரும்புகிறேன்.

Sri A. VEDARATHNAM : பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். 40-வது விதியின்படி வரும் இந்தப் பிரச்னையைப்பற்றி இதர மெம்பர்கள் பேசுவதற்கும் அனுமதி உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

Mr. SPEAKER : அனுமதி கிடையாது.

* **The Hon. Sri R. VENKATARAMAN** : Mr. Speaker, Sir, at the general body meeting of the National Match Workers' Union, Sattur, held on the 11th March 1958 the following resolution was passed : ' This meeting notes with grave concern the decision of the South India Swadeshi Match Manufacturers' Association, Sattur, to close down all Match Factories in South India on account of the Government's withdrawal of the rebate concession on matches of 30s. to 50s. The meeting wishes to impress upon the Government that if the closure is effected, more than one lakh of workers will be adversely affected'. The Union also requested the Government of India to investigate immediately the grievances of the manufacturers and take suitable steps in the interests of production and employment. No intimation from the employers of Match Factories has been received by this Government about the closure of these factories. It is understood that about 60 factories in Sattur, Srivilliputtur area were closed on the 17th March 1958 in pursuance of the decision taken on the 15th March 1958 to protest against the Central Government's withdrawal of rebate concession to matches. It is also understood that the managements have agreed to pay wages to the workers for the period of the lock-out. A detailed report has been called for in the matter. This Government are pressing the Government of India to allow preferential rates of duty for small scale match factories and boxes containing 30s to 50s sticks produced by them.

Sri V. K. KOTHANDARAMAN : கனம் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை பேரிலே நானும் ஏற்கெனவே நோட்டீஸ் கொடுத் திருக்கிறேன் சிவகாசி, சாத்தூர் பற்றி சற்று முன்னால் பேசப்பட்டது. ஆனால், வடாற்காடு ஜில்லாவை எடுத்துக்கொண்டால், அங்கே பத்து தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவை என்ன நிலைமையில் இருக்கின்றன என்பதை விளக்கிச் சொல்லவேண்டும். ஆகையால், தயவு செய்து எனக்கும் பேசுவதற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

Mr. SPEAKER : 40-வது விதியின் பிரகாரம் ஒருவர்தான் பேச முடியும். கனம் திரு. அன்பழகன் அவர்கள் மார்ச்சு மாதம் 14-ந் தேதியன்று நோட்டீஸ் கொடுத்தார்கள். தாங்கள் 25-ந் தேதி நோட்டீஸ் கொடுத்தீர்கள். அவருக்குத்தான் முதல் ஸ்தானம் கிடைக்கும். உங்களுக்கு அதில் பேசுவதற்கு அனுமதி கிடையாது.